பிரஸார் பாரதி

<u>அகில இந்திய வானொலி, சென்னை-4</u>

24 03 2024 6 45

ஞாயிற்றுக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. வாக்காளர் பட்டியலில் பெயர் இடம்பெற்றிருந்தால் மட்டுமே வாக்களிக்க தகுதி உடையவர் என்று தேர்தல் ஆணையம் தெளிவுபடுத்தியுள்ளது.

2. மக்களவைத் தேர்தலில் பிஜேபி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை இறுதி செய்வதற்காக அக்கட்சியின் மத்திய தேர்தல் குழுக் கூட்டம் புதுதில்லியில் நடைபெற்றது.

3. நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிடும் 45 வேட்பாளர்கள் அடங்கிய மற்றொரு பட்டியலை காங்கிரஸ் கட்சி வெளியிட்டுள்ளது.

4. மருத்துவமனைகளில் தீ விபத்து ஏற்படுவதை தவிர்க்கும் வகையில் உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று மத்திய சுகாதார அமைச்சகம் கேட்டுக்கொண்டுள்ளது.

5. ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் நேற்றிரவு நடைபெற்ற ஆட்டத்தில் கொல்கத்தா அணி 4 ரன் வித்தியாசத்தில் ஹைதராபாத் அணியை வென்றது.

<u>*------ இனி விரிவான செய்திகள் ---*</u>

*<<<<>>>>*

நாடாளுமன்ற பொதுத்தேர்தல் மற்றும் விளவங்கோடு சட்டப்பேரவைக்கான இடைத்தேர்தலில் வாக்களிக்கும் முன் வாக்காளர்கள் தங்களது வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையை காண்பிக்க வேண்டும் என்று இந்திய தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

இது தொடர்பாக மாநில அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் வாக்காளர் புகைப்பட அட்டை இல்லாத வாக்காளர்கள் தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஆதார் அட்டை, ஓட்டுநர் உரிமம், வருமான வரி நிரந்தர கணக்கு எண் அட்டை, இந்திய கடவுச்சீட்டு உள்ளிட்ட 12 ஆவணங்களில் ஏதேனும் ஒன்றை மாற்று புகைப்பட அடையாள ஆவணமாக பயன்படுத்திக்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் இந்த அடையாள ஆவணங்கள் மட்டுமின்றி வாக்காளர் பட்டியலில் வாக்காளரின் பெயர் இடம்பெற்றிருந்தால் மட்டுமே அவர் வாக்களிக்க தகுதி உடையவர் என்றும் அந்த அறிக்கையில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

வெளிநாடு வாழ் இந்தியர்கள் கடவுச்சீட்டின் விவரங்களை அடிப்படையாகக் கொண்டு தங்களது அடையாளத்தை வாக்குச்சாவடியில் மெய்ப்பிக்க வேண்டும் என்றும் தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

வாக்காளர் பட்டியலில் வாக்காளரின் வரிசை எண்ணை அறிந்துகொள்ளும் வகையில் புகைப்பட வாக்காளர் சீட்டுக்கு பதிலாக வாக்காளர் தகவல் சீட்டினை அச்சிட்டு வழங்க தேர்தல் ஆணையம் முடிவு செய்துள்ளது.

இதில் வாக்குச்சாவடியின் பெயர், வாக்குப்பதிவு நாள், நேரம் போன்ற தகவல்கள் இடம்பெற்றிருக்கும். மாவட்ட தேர்தல் அலுவலரால் வாக்குப்பதிவுக்கு 5 நாட்களுக்கு முன்னர் அனைத்து வாக்காளர்களுக்கும், வாக்காளர் தகவல் சீட்டு வினியோகிக்கப்படும் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இருப்பினும் இந்த வாக்காளர் தகவல் சீட்டு, வாக்காளரின் அடையாள ஆவணமாக ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்று தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

<<<>>>

மக்களவைத் தேர்தலில் பிஜேபி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை இறுதி செய்வதற்காக அக்கட்சியின் மத்திய தேர்தல் குழுக் கூட்டம் புதுதில்லியில் நேற்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பிரதமரும், அக்கட்சியின் மூத்த தலைவருமான திரு. நரேந்திர மோடி, அக்கட்சியின் தேசிய தலைவர் திரு. ஜே.பி. நட்டா, கட்சியின் மூத்த தலைவர்களான திரு. அமித் ஷா, திரு. ராஜ்நாத் சிங் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

மூன்று மணி நேரம் நடைபெற்ற இக்கூட்டத்தில் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் பெயர்கள் குறித்து விவாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<>>>

மக்களவைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் பெயர்கள் அடங்கிய மற்றொரு பட்டியலை காங்கிரஸ் கட்சி நேற்று வெளியிட்டுள்ளது.

45 வேட்பாளர்களின் பெயர்கள் அடங்கிய இப்பட்டியலில் வாரணாசி தொகுதியில் உத்தரப்பிரதேச மாநில காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. அஜய்ராய் போட்டியிடுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

உத்தரப்பிரதேசத்தில் உள்ள அம்ரோஹா தொகுதியில் திரு. டேனிஷ் அலியும், மத்தியப்பிரதேச மாநிலம் ராஜ்கர் மக்களவைத் தொகுதியில் காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களின் ஒருவரான திரு. திக்விஜய் சிங்கும் போட்டியிடுகின்றனர்.

தமிழகத்தில் உள்ள சிவகங்கை நாடாளுமன்றத் தொகுதியில் திரு. கார்த்தி சிதம்பரமும், விருதுநகர் தொகுதியில் திரு. மாணிக்கம் தாக்கூரும் போட்டியிடுகின்றனர்.

ராஜஸ்தானில் உள்ள **Nagaur** தொகுதியை ராஷ்ட்ரிய லோக் தந்த்ரிக் கட்சிக்கு காங்கிரஸ் வழங்கியுள்ளது.

இதனிடையே சிக்கிம் மாநில சட்டப்பேரவைத் தேர்தலுக்கான 18 வேட்பாளர்கள் அடங்கிய முதல் பட்டியலை காங்கிரஸ் வெளியிட்டுள்ளது.

<<<<>>>>

அடுத்த மாதம் நடைபெற உள்ள நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் திருநெல்வேலி தொகுதியில் அஇஅதிமுக சார்பில் திருமதி ஜான்சிராணி போட்டியிடுவார் என அக்கட்சி அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக அக்கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில், ஏற்கனவே அக்கட்சியின் வேட்பாளராக அறிவிக்கப்பட்டிருந்த திருமதி சிம்லா முத்துச்சோழனுக்கு பதிலாக புதிய வேட்பாளர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

கோடை காலத்தில் மருத்துவமனைகளில் தீ விபத்து ஏற்படுவதை தவிர்க்கும் வகையில் உரிய நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு அனைத்து மாநில மற்றும் யூனியன்பிரதேச அரசுகளை மத்திய சுகாதார அமைச்சகம் கேட்டுக்கொண்டுள்ளது.

இதுதொடர்பாக மத்திய சுகாதார துறைச் செயலர் திரு. அபூர்வசந்திரா, அனைத்து மாநில மற்றும் யூனியன்பிரதேச அரசுகளுக்கு எழுதியுள்ள கடிதத்தில் கோடை காலத்தில் வெப்பம் அதிகரித்து தீ விபத்து ஏற்படும் சாத்தியக்கூறுகள் உள்ளதாகவும், அதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் உரிய முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

மாநிலங்களில் உள்ள சுகாதாரத்துறைகள் மற்றும் மாநில பேரிடர் மேலாண்மை ஆணையத்துடன் இணைந்து தங்கள் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள மருத்துவமனைகளில் தீ விபத்து ஏற்படாதவாறு தடுக்கும் வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அதில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மருத்துவமனைகளில் எச்சரிக்கை ஒலிப்பான், தீயணைப்பான் உள்ளிட்ட சாதனங்களின் செயல்பாடுகள் குறித்து தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு அவற்றின் பயன்பாடுகள் உறுதி செய்யப்பட வேண்டும் என்று மத்திய சுகாதார அமைச்சகம் கேட்டுக்கொண்டுள்ளது.

<<<<>>>>

தமிழகத்தில் நூறு சதவீத வாக்குப்பதிவை உறுதி செய்யும் வகையில் விழிப்புணர்வை நிகழ்ச்சிகள் அனைத்து மாவட்டங்களிலும் முனைப்புடன் நடத்தப்பட்டு வருகின்றன.

இதன் ஒரு பகுதியாக பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள பெரம்பலூர் மற்றும் குன்னம் சட்டப்பேரவைத் தொகுதியைச் சேர்ந்த வாக்காளர்கள் வாக்களிப்பதற்கு ஏதுவாக 652 வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்பட உள்ளது.

குன்னம் சட்டப்பேரவைத் தொகுதிக்கு உட்பட்ட வாக்குச்சாவடிகளில் பணியாற்ற உள்ள வாக்குச்சாவடி தலைமை அலுவலர் மற்றும் வாக்குப்பதிவு அலுவலர்கள் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் குறித்த பயிற்சி இன்று நடைபெற உள்ளது.

இதற்கான முன்னேற்பாட்டுப் பணிகளை அம்மாவட்ட ஆட்சியரும், மாவட்ட தேர்தல் அதிகாரியுமான திருமதி கற்பகம் நேரில் ஆய்வு செய்தார்.

தூத்துக்குடியில் நூறு சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தும் வகையில் விழிப்புணர்வை கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.

மக்கள் அதிகம் கூடும் கடற்கரைப் பகுதிகளில் வார இறுதி நாட்களில் வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வை கலைநிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது.

அனைவரும் வாக்களிப்போம் என்ற விழிப்புணர்வை கையெழுத்து இயக்கம் குறித்து வாக்காளர் ஒருவர் கூறுகையில்...

மாபெரும் ஜனநாயக திருவிழாவான தேர்தலில் முதல் முறையாக வாக்களிக்க உள்ள ராமநாதபுரத்தைச் சேர்ந்த கல்லூரி மாணவி லோஹிதா, வாக்களிக்க வேண்டியதன் அவசியம் குறித்து தனது கருத்தை தெரிவித்தார்.

தென்காசி மாவட்டத்தில் நாடாளுமன்ற பொதுத்தேர்தல் குறித்து வாக்காளர்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் 'தேர்தல் திருவிழா – தேசத்தின் பெருவிழா' என்ற குறும்படத்தை ஆட்சியரும், மாவட்ட தேர்தல் அதிகாரியுமான திரு. கமல் கிஷோர் வெளியிட்டார்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் தேர்தலின்போது பாதுகாப்புப் பணியில் முன்னாள் படை வீரர்களை ஈடுபடுத்துவதற்கு உரிய ஆணைகள் பெறப்பட்டுள்ளதாகவும், இதற்காக சிறப்பு ஊதியம் வழங்கப்படும் என்றும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

65 வயதுக்கு உட்பட்ட உடல் தகுதியுள்ள முன்னாள் படைவீரர்கள் தாம்பரம் ரயில் நிலையத்தின் எதிரே உள்ள துணை இயக்குநர் அலுவலகத்தில் உரிய சான்றுடன் உடனடியாக பதிவு செய்துகொள்ளலாம் என்று ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் தெரிவித்துள்ளார்.

திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள மூவாயிரத்து 687 வாக்குச்சாவடி மையங்களுக்குத் தேவையான வாக்குப்பதிவு இயந்திரங்கள் உள்ளதாக மாவட்ட ஆட்சியர் திரு. பிரபுசங்கர் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

இந்தியா - ஜப்பான் நாடுகளிடையேயான கலாச்சார தொடர்புகளை அறிந்துகொள்ளும் வகையில் 2 புத்தகங்களை இந்திரா காந்தி தேசிய கலை மையம் வெளியிட்டுள்ளது.

------------

ரஷ்யாவில் நடைபெற்ற தீவிரவாத தாக்குதலில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 133ஆக அதிகரித்துள்ளது.

------------

நாட்டின் விடுதலைக்காக உயிர்த் தியாகம் செய்த சுதந்திரப் போராட்ட வீரர்களான பகத்சிங், ராஜ்குரு மற்றும் சுக்தேவ் ஆகியோரின் நினைவுதினத்தை ஒட்டி நாடு அவர்களுக்கு மரியாதை செலுத்துகிறது.

------------

பஞ்சாப் மாநிலம் சங்ரூர் மாவட்டத்தில் கள்ளச்சாராயம் அருந்தியதில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 21ஆக அதிகரித்துள்ளது.

------------

பழனியில் பங்குனி உத்திரத் திருவிழாவின் முக்கிய நிகழ்வான திருக்கல்யாண வைபவம் நேற்று வெகுவிமரிசையாக நடைபெற்றது.

------------

தேனி மாவட்டம் பெரியகுளம் பாலசுப்பிரமணிய கோவில் தேரோட்டத்தில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் திரளாக கலந்துகொண்டனர்.

------------

நீலகிரி மாவட்டம் குன்னூர் அருகே ஃபாரஸ்ட் டேல் பகுதியில் ஏற்பட்ட காட்டுத் தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்ட 50க்கும் மேற்பட்ட தீயணைப்புத் துறையினருக்கு தனியார் மருத்துவமனையில் மருத்துவப் பரிசோதனை நடைபெற்றது.

------------

*விளையாட்டுச் செய்திகள்*

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் கொல்கத்தாவில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் கொல்கத்தா அணி 4 ரன் வித்தியாசத்தில் ஹைதராபாத் அணியை வென்றது.

முதலில் ஆடிய கொல்கத்தா அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 208 ரன் எடுத்தது.

209 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு ஆடிய ஹைதராபாத் அணி, 20 ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 204 ரன் மட்டுமே எடுத்தது.

முன்னதாக நேற்று மாலை மொஹாலியில் நடைபெற்ற போட்டியில் பஞ்சாப் அணி 4 விக்கெட் வித்தியாசத்தில் தில்லி அணியை வென்றது.

இன்று நடைபெற உள்ள போட்டியில் ராஜஸ்தான் அணி – லக்னோ அணியை எதிர்கொள்கிறது.

ஜெய்ப்பூரில் நடைபெறும் இப்போட்டி மாலை மணி 3.30க்கு தொடங்குகிறது.

மற்றொரு போட்டியில் குஜராத் அணி – மும்பை அணியை எதிர்கொள்கிறது.

அகமதாபாதில் நடைபெறும் இப்போட்டி இன்றிரவு ஏழரை மணிக்கு தொடங்குகிறது.

------------

**Murcia** ஓபன் டென்னிஸ் போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவு இறுதி ஆட்டத்தில் இந்தியாவின் ஜீவன் நெடுஞ்செழியன் - அர்ஜுன் கதே இணை தோல்வியடைந்தது.

ஸ்பெயினில் நடைபெற்ற இப்போட்டியில் இந்த இணை, 7-5, 6-1 என்ற செட் கணக்கில் ருமேனியாவின் **Vilad Victor Cornea** – பிரான்சின் **Theo Arribage** இணையிடம் தோல்வியடைந்தது.

-------------

சுவிஸ் ஓபன் பேட்மிட்டன் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு அரை இறுதி ஆட்டத்தில் இந்தியாவின் கிடாம்பி ஸ்ரீகாந்த் 21-15, 9-21, 18-21 என்ற செட் கணக்கில் தைவானின் **Lin Chun** இடம் தோல்வியடைந்தார்.

**<<<<The End>>>>**